# ஏர்போர்ட் – வண்ணாரப்பேட்டை: 2018 டிசம்பரில் மெட்ரோ சேவை





■ சென்னை வண்ணாரப்பேட்டை – விம்கோநகர் இடையேயான, மெட்ரோ ரயில் பாதை பணியில், கொருக்குப்பேட்டை ஸ்டேஷன் பகுதியில், சுரங்கப்பாதை அமைப்பதை முடித்து, கம்பீரமாய் வந்து நின்ற டனல் இயந்திரம். ■ சுரங்கப்பாதையின் உட்புற தோற்றம்.

**சென்னை, செப். 25–**

''வண்ணாரப்பேட்டை – திருவெற்றியூர் விம்கோ நகர் இடையே, 2019 ஜூலைக்குள் பணிகள் முடிக்கப்பட்டு, விமான நிலையம் – விம்கோ நகர் இடையே ரயில் போக்குவரத்து துவக்கப்படும்,'' என, மெட்ரோ ரயில், சுரங்கபாதை கட்டுமான பிரிவு, தலைமை பொது மேலாளர், அரவிந்த்குமார் ராய் கூறினார்.

**9.2 கிலோ மீட்டர் பாதை**

சென்னையில், மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 3,770 கோடி ரூபாய் செலவில், 9.2 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

இதில், 1.8 கி.மீ., பாதை, சுரங்கத்திலும்; 7.4 கி.மீ., பாதை தரைக்கு மேலும், அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பாதையில், எட்டு நிலையங்கள் அமைக்கப் பட உள்ளன. இதற்கான பணிகளை, 2016, ஜூலையில், வண்ணாரப்பேட்டையில், மறைந்த முதல்வர், ஜெயலலிதா துவங்கி வைத்தார்.

இத்திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – தியாகராயர் கல்லூரி – கொருக்குப்பேட்டை இடையே, ஒரு வழித் தடத்தில், 1.8 கி.மீ. சுரங்கப் பாதை அமைக்கும் பணி நேற்று முடிவடைந்தது.

சுரங்கப்பாதை கட்டுமான பிரிவு பொது மேலாளர், அரவிந்த்குமார் ராய் கூறியதாவது:

வண்ணாரப்பேட்டை – கொருக்குப்பேட்டை இடையே, 1.8 கி.மீ., சுரங்கப்பாதை அமைக்கும் பணியில், ஒரு பாதை பணி முடிந்துவிட்டது.

மற்றொரு பாதையில், 1.33 கி.மீ., முடிந்துள்ளது; மீதமுள்ள, 465 மீட்டர் பாதைப்பணி, டிசம்பரில் முடியும். இதற்காக, 411 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

இந்த பாதை, 410 கட்டடங்களுக்கு கீழ் அமைந்துள்ளது. இதற்காக, 310 ஆழ்துளை கிணறுகள் மூடப்பட்டுள்ளன.

இந்த மார்க்கத்தில், கொருக்குப்பேட்டை முதல், விம்கோ நகர் வரை, தரைக்கு மேல் அமையும் பாலத்தில், ரயில் பாதை அமைக்கப்படும். சுரங்க ரயில் நிலையங்கள், 230 மீட்டர் நீளத்தில் கட்டப் பட்டுள்ளது. தியாகராஜர் கல்லூரி, கொருக்குப்பேட்டை நிலையங்கள், 180 மீட்டர் நீளத்தில் அமைக்கப்படுகிறது. நீளம் குறைக்கப்பட்டாலும், நிலையத்தில், பயணியர் பயன்பாட்டுக்கான இடம் குறைக்கப்படவில்லை.

ஜி.எஸ்.டி., வரியால், தளவாட பொருட்களில், வரியால் ஒன்றின் விலை கூடினாலும், மற்றவற்றின் விலைகள் குறைவாக உள்ளதால், மெட்ரோ ரயில் திட்டத்திற்கு பாதிப்பு இல்லை.

**ஏர்போர்ட் – சென்டரல்**

தற்போது, விமான நிலையத்தில் இருந்து, நேரு பூங்கா வரை, மெட்ரோ ரயில் போக்குவரத்து நடந்து வருகிறது.

நேரு பூங்கா – சென்ட்ரல் இடையே சுரங்கப்பாதை அமைக்கப் பட்டு, உட்கட்டமைப்பு பணிகள் துரிதமாக நடந்து வருகிறது.

வரும் டிசம்பரில், விமான நிலையம் – சென்ட்ரல் இடையே போக்குவரத்து துவக்கப்படும்.

விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை இடையே, அண்ணா சாலை வழியாக சுரங்கப் பாதை பணியில், ஆயிரம் விளக்கில், பணி நடந்து வருகிறது. இப்பணி முடிந்து, 2018 டிச.,க்குள், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை இடையே ரயில் இயக்கப்படும்.

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் பாதை பணி, வரும், 2019, ஜூலையில் முடிக்கப்பட்டு, விமான நிலையம் – விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படும்.

இவ்வாறு அரவிந்த் குமார் ராய் கூறினார்.